[Sri M. Kalyanasundaram] [12th September 1958

எனது ஞாபகம். யார் அதை உபயோகித்திருந்தாலும் இது இச்சபையின் ஒழுங்கிற்கு விரோதமான வார்த்தை. அதை எச்சந்தர்பத்தில் குறிப்பிட்டார்கள் என்பதை பற்றி நான் இப்பொழுது இங்கு குறிப்பிட விரும்பாவிட்டாலும்; எதிர்கால சட்டசபை நடவடிக்கைகளுக்கு உதவிகரமான முறையில் இருப்ப தற்கு அப்படிப்பட்ட வார்த்தைகள் இந்த சபையின் ஒழுங்கிற்கு பொருத்த மாகுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

Mr. SPEAKER : The use of the word 'cheating' is bad. "சீட்டிங்" என்று சொல்வது இந்த சபையின் ஒழுங்கிற்கு சரியல்ல. நடந்தது நடந்து விட்டது. இனிமேலாவது அப்படிப்பட்ட வார்த்தைகளை உபயோகிக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

Sri P. S. K. LAKSHMIPATHIRAJ : நேற்று கருணாநிதி அவர்கள் இந்த சபையில் பேசும்போது சூரியனை விரும்பாதவர்கள் கள்ளர்கள் என்றும், கற்பை விலைக்கு விற்பவர்கள்தான் சூரியனை இகழ்வார்கள் என்றும் சொன்னார்கள். அவர் பேசும்போது நேற்று நீங்கள் இங்கு இல்லை. ஆகவே அதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்பு கிறேன்.

Mr. SPEAKER : அப்பொழுது யார் சேரில் உட்கார்ந்திருந்தார்களோ அவரிடம் கேட்டிருக்க வேண்டும். அதைப் பற்றி நான் இப்பொழுது ஒரு தீர்ப்பு கொடுக்க முடியாது.

Sri P. S. K. LAKSHMIPATHIRAJ : அவ்வார்த்தைகளை சபை நடவடிக்கைகளிலிருந்து எடுத்து விடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

Mr. SPEAKER : எனது ரூமிற்கு வந்து பேசுங்கள், அதைப்பற்றி.

Sri M. R. KANDASWAMI MUDALIYAR : அத்தீர்மானம் பற்றிய விவாதம் இன்னும் தீரவில்லை. ஆகவே . .

Mr. SPEAKER : அப்படிப்பட்ட வார்த்தைகளை உபயோகிப்பது சரியல்ல.

IV.—CALLING ATTENTION TO THE BEEDI WORKERS' STRIKE IN TIRUCHIRAPPALLI.

Mr. SPEAKER : Now the hon. Member, Sri M. Kalyanasundaram, will call the attention of the Hon. Minister for Industries to the dispute between the workers and employers in the beedi industry in Tiruchirappalli, under rule 40 of the Assembly Rules.

Sri M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, பீடித் தொழில் சம்பந்தமாக ஒரு மசோதா வரவிருக்கும் இத்தருணத் தில் நான் இது சம்பந்தமான ஒரு பிரச்னையை இங்கு கொண்டு வர நேர்ந்து இருப்பது துரதிருஷ்டவசமானது தான். திருச்சி நகரத்தில் கடந்த ஐந்தாம் தேதியில் இருந்து கிட்டத்தட்ட 20,000 பீடித் தொழிலாளர்கள் வேலை செய்யாமல் இருந்து வருகிறார்கள். வேலை நிறுத்தம் அமைதி யாக நடைபெறுகிறது. இதில் முக்கியமான பிரச்னை, கூலி உயர்வு சம்பந்தமானதாகும். திருச்சி நகரத்தில் ஆயிரம் பீடி சுற்றுவதற்கு கூலி ரூபாய் 1—8—0 கொடுக்கப்படுகிறது. நமது ராஜ்யத்திலேயே மிகக் குறைவான கூலி கிடைப்பது திருச்சியில்தான். திருநெல்வேலியில் கூலி குறைவு என்று சிலர் சொல்லலாம். சம்பளப் பிடித்தம் போன்றவைகளை எடுத்துப்பார்க்கும்போது திருச்சியில்தான் கூலி குறைவாகக் கிடைக்கிறது என்பது தெரிய வரும். திருச்சியில் இருக்கக்கூடிய பீடி முதலாளிகள் இம்மாகாணத்தில் மிகப் பெரிய செல்வாக்கு உடையவர்கள். அவர்கள், மினிமம் வேஜஸ் கமிட்டி சிபார்சு செய்வதைக் கூட தடை செய்ய வேண்டு மென்றும், அதற்கு ஒரு இடையூறு செய்யவேண்டுமென்ற நோக்கத் தோடு பிடிவாதமாக சமரசம் பேச முன்வர மறுக்கிறார்கள். கலெக்டர் முதல் லேபர் ஆபீஸர் வரையில் எல்லோரும் சமரசம் பேச

12th September 1958] [Sri M. Kalyanasundaram]

அவர்களை அழைத்த போதிலும், சமரசம் பேசுவதற்கு அந்த முதலாளிகள் உட்படுவதில்லை. 5–ம் தேதிக்கு முன் உற்பத்தி செய்த பீடிகளை அப்புறப்படுத்த போலீஸ் அவர்களுக்கு உதவி புரிவதின் காரணம் என்ன? அவர்களுக்கு என் போலீஸ் உதவுகிறது, அப்பீடிகளை அப்புறப்படுத்துவதற்கு. சமரசம் பேச முதலாளிகள் வர மாட்டேன் என்கிறார்கள், ஆனால் ஏற்கனவே உற்பத்தி செய்த பீடிகளை கிடங்குகளிலிருந்து அப்புறப்படுத்த எதற்காக போலீஸ் உதவி அனுப்பப்படுகிறது என்பதை என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை. ஹிந்து பத்திரிகைத் தொழிலாளர்கள் போராட்டம் நடந்தபோது. அமைதியான முறையில் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தும்போது முதலாளிகளுக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்படமாட்டாது என்று அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். அப்படி அதில் போலீஸ் தலையிடாமல் இருந்ததினால்தான் அப்போராட்டம் வெற்றிபெற்றது. ஆனால் திருச்சியில் நிலை வேறாக இருக்கிறது. அதற்கு காரணம் என்ன ? தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட மட்டில், இப்பிரச்னையை சமரசமாக தீர்க்க வேண்டுமென்ற ஆவல் அவர்களுக்கு இருக்கிறது. ஆனால் முதலாளிகள் சமரசத்திற்கு இணங்க மறுக்கிறார்கள். ஆகவே, சர்க்கார் இது சம்பந்தமாக் என்ன நடவடிக்கைகள் எடுக்க உத்தேசித்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

* THE HON. SRI R. VENKATARAMAN : Sir, the workers employed in 21 beedi manufacturing establishments in Tiruchirappalli demanded that the managements should increase the wage of Rs. 1–8–0 for rolling 1,000 beedies to Rs. 2–4–0 for 1,000 jadi beedies and Rs. 2 for 1,000 sada beedies and that the wages for pasting rings on 1,000 beedies should be fixed at three annas and the workers supplied with yarn, paste, etc. The workers who are members of the Tiruchirappalli District United Beedi Labour Union staged a token strike on 3rd August 1958 on this issue. According to the newspaper report, 20,000 workers have gone on strike from 5th September 1958.

The Labour Officer, Tiruchirappalli, met the representatives of the workers and the managements on 31st July 1958 and 25th August 1958, held conciliation proceedings in the matter and has submitted his report. The report with the remarks of the Commissioner of Labour has just been received and is under the consideration of the Government.

V.—GOVERNMENT BILL.

THE MADRAS BEEDI INDUSTRIAL PDEMISES (REGULATION OF CONDITIONS OF WORK) BILL, 1958 (L.A. BILL NO. 18 OF 1958).

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, amendments to the Bill were to be given day before yesterday but the Government amendments are even now coming in. In view of the fact that we are going to have clause-by-clause consideration of the Bill only tomorrow, I request that the time for giving amendments may be extended up to this evening.

MR. SPEAKER : I am glad the hon. Member has raised this point. The Government have got a right to bring in amendments even at the last minute, even when the clauses are under consideration, on the floor of this House. That privilege hon. Members do not have. We have fixed a particular time-limit for the receipt